# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.359/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W**.4.செல்வராஜ் |
| **Father's Name** | : முத்துராஜ் |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 22.12.2021

**மு.வி:**

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். நான் 6 ஆம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது எழுமலை காவலர் அழைத்து என்னிடம் கையெழுத்தை வாங்கினார்கள். எதற்காக என்ற விபரம் சொல்லவில்லை. பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3.** கையெழுத்து வாங்கிய பிறகு என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

14.06.2013 ஆம் தேதி மாலை 6 மணிக்கு எழுமலை காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண்.111-13 வழக்கின் சம்பவ இடத்தை எழுமலை கிருஷணன் கோவில் தெருவில் உள்ள எதிரியின் வீட்டிற்கு அருகில் பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அதில் நானும் சாட்சி செல்லமுத்து என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. பார்வை மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு ஆய்வாளர் என்னை விசாரித்ததையும் மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி: இல்லை.